Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.107/2025

Dated 21-01-2026
Deposition of witness for : PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | யாகோப் | வயது | : | 65 |
| தந்தை பெயர் | : | அந்தோணிசாமி | தாலுக்கா | : | பூதலூர் |
| கிராமம் | : | செல்லப்பன்பேட்டை | தொழில் | : | விவசாயம் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

All **Accused present**

Ld.D **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன்.

2) இதற்கு முன்பு நான் அய்யாசாமிபட்டி ரோட்டின் அருகில் உள்ள ஊசி கம்பெனியில் வாட்ச்மேனாக வேலை பார்த்து வந்தேன். அப்போது நான்கு பேர் வேலை பார்த்தோம். யார்

யார் என்று நினைவு இல்லை.

3) ராஜேந்திரன் என்பவர் இறந்துபோய்விட்டார். அங்கிருந்து 4 ஆள் வந்தார்கள். முதலில் கல்லை எடுத்து எரிந்தார்கள். அதற்கு பிறகு கட்டையை எடுத்து மண்டையில் அடித்தார்கள். இருட்டு மின் வெளிச்சம் இல்லை என்பதால் அடித்தவர்கள் யார் என்று தெரியவில்லை.

4) இன்றிலிருந்து 7, 8 வருடத்திற்கு முன்பு நடந்தது. இறந்துபோன ராஜேந்திரனை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனார்கள். அங்கு செத்து போய்விட்டார்.

5) யார் புகார் கொடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது.

(சாட்சியானர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின்படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

1) போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் தஞ்சாவூர் - திருச்சி மெயின்ரோட்டில் அய்யாசாமிபட்டிக்கு செல்லும் பிரிவு சாலையில் கீழ்புறம் உள்ள செங்கிப்பட்டி ஊசி கம்பெனியில் நான், வாசுதேவன், ராஜேந்திரன், கலியபெருமாள் ஆகியோர் வாட்ச்மேனாக வேலை பார்த்து வந்ததாகவும் அப்போது 23.06.2018 ம் தேதி இரவு 9.30 மணிக்கு மெயின்கேட்டை பூட்டிவிட்டு கம்பெனி வெளியில் இருந்தபோது கிழக்கு பக்கம் உள்ள காம்பவுண்ட் சுவரின் குறுக்காக உள்ள இரும்பு கேட் வழியாக ஏறி குதித்த நான்கு நபர்கள்

ஏண்டா தேவடியா குச்சிகாரி மகன்களா எங்கள் ஓனர் என்ன இளிச்சவாயான உங்கள பேங்க் மூலமாக சாப்பாடு போட்டு சம்பளம் கொடுத்து வச்சிருக்காங்க என்றும்

2) நீங்க என்ன பெரிய ஆள் மயிரா என்று அசிங்கமாக திட்டி ஆளுக்கொரு வேலிக்கருவை கட்டையால் ராஜேந்திரனின் தலையில் ஒருவர் இத்தோடு தொலைந்து போடா என்று சொல்லி அடித்தார்என்றும் மற்றொருவரும் தலையில் அடித்தார் என்றும் அதனால் ராஜேந்திரன் ரத்த வெள்ளத்தில் கீழே தலையில் மயங்கி விழுந்தார் என்றும் நீங்கள் எல்லாம் யாருடா, எதற்காக இங்க வந்து எங்களிடம் தகறாறு செய்றீங்க என கேட்ட கலியபெருமாளையும் தலையில் அடித்தார்கள் என்றும் கலியபெருமாளும் மயங்கிய நிலையில் காயம்பட்டு கீழே விழுந்துவிட்டார் என்றும்

3) பக்கத்து நிறுவனத்தில் வேலை பார்த்தவர்கள் ஓடி வரவே அவர்கள்அனைவரும் ஓடிவிட்டார்கள் என்று சொல்லி விட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒம்/-P. வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்